**எஹெலியகொட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 28 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் எஹெலியகொட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவினம் ரூபா 256,962 இனை கணக்கீடு செய்திருக்கவில்லை. | வருடத்திற்குரிய செலவினங்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | பிழையை சரி செய்ய குறித்துக்கொண்டேன். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 117,680 ஆன நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்குரிய மூலதன செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது அச் சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு குறித்துக்கொண்டேன். |
| (இ) | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 33,300 பெறுமதியான அச்சு இயந்திரமொன்று சொத்துக்கள் கொள்வனவு மற்றும் நன்கொடையின் கீழ் இரு முறை மூலதனமாக்கப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய மூலதன செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய குறித்துக்கொண்டேன். |
| (ஈ) | கூட்டுத் தொகை ரூபா 64,932 ஆன 33 ஆயுள்வேத ஔடத வகைகளின் இருப்பொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய குறித்துக்கொண்டேன். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய மூலதன உதவி கூட்டுத்தொகை ரூபா 2,193,910 | வருடத்திற்குரிய நடைமுறை சொத்துக்கள் சரியாக | 2019 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குறித்துக்கொண்டேன். |
| (ஊ) | மீளாய்வாண்டு தொடர்பாக கடன்கொடுனர் ரூபா 946,692 குறைவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு தயாரிக்க வேண்டும். | 2019 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய குறித்துக்கொண்டேன். |
| (எ) | 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகளிற்கும் துணைப் பதிவேட்டு மீதிகளிற்குமிடையில் ரூபா 3,853,383 ஆன வேறுபாடு நிலவின. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் துணைப் பதிவேடுகள் இணக்கம் செய்யப்பட வேண்டும் | பதிவேடுகளை மீண்டும் சமன் செய்து சீர்செய்வதற்கும், அதன் பிரகாரம் 2019 ஆண்டில் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இவ்வேறுபாடுகளை சரி செய்யவும் ஆலோசனை வழங்கினேன். |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 371(2)(இ) | 1995 முதல் 2014 வரையான காலத்தினுள் 73 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,202,498 ஆன முற்பணம் மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 1995 முதல் 2014 வரையான காலத்தினுள் வழங்கப்பட்டிருந்த முற்பணத்தை தீர்ப்பதற்கான தகவல்களை பெற்றுக் கொள்வது கடினமாகவுள்ளது. ஏனைய முற்பணங்கள் தொடர்பாகவும் தகவல் பரிசீலனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத் தகவல்கள் கிடைத்த பின்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,498,730 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 15,589,017 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 8,716,500 | 8,911,406 | 7,025,062 | 15,858,134 | 8,477,000 | 9,023,814 | 8,573,527 | 13,490,044 |
| (ii) | வாடகை | 9,177,600 | 8,558,020 | 8,562,817 | 682,884 | 6,738,900 | 7,033,416 | 7,216,722 | 685,781 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,122,300 | 1,042,271 | 1,051,621 | 5,750 | 881,650 | 1,035,707 | 1,007,807 | 91,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 24,580,400 | 24,083,720 | 20,802,729 | 23,407,099 | 23,638,500 | 22,981,403 | 33,438,251 | 20,002,855 |

#### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) (i) வீத வரி அறவிடுவதற்காக சபை அதிகார எல்லையில் அனைத்து அசைவற்ற சொத்துக்களையும் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதும், 2012 ஆண்டின் பின்னர் சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். | 2017 ஆண்டின் போது பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிய போதும், அவர்களால் மொத்த வீத வரி எல்லையிலும் ஆய்வொன்றை மேற் கொண்டு பட்டியல் தயாரிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆய்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போது அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக தற்போது அதனை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்தது. எதிர் வரும் ஆண்டில் இந் நடவடிக்கைகளை நிறைவு செய்ய தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வீத வரி மீதி ரூபா 8,783,798 ஆனதுடன், அதனுள் 03 ஆண்டுகளை விஞ்சிய காலமொன்று நிலுவையாக உள்ள 4,156 அலகுகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 4,843,624 நிலவியது. 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 (1) பிரிவின் பிரகாரம் நிலுவை வீத வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீத வரி அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். | சபை அதிகார எல்லையில் 7000 வீத வரி அலகுகளிற்கு அதிக அளவில் காணப்படுவதுடன், அதற்காக ஒரு வருமான பரிசோதகர்கள் மாத்திரமே இருக்கின்றார். அவ்வாறே புதிதாக முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக பிரசுரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் கூடுதாலன அளவினுள் நுகர்வோரிற்கு வழங்க வேண்டிய வசதிகளை வழங்க முடியாமையினால் குறித்த நபர்கள் வீத வரி செலுத்துவதை மறுத்துள்ளனர். நிலுவை வருமானத்தை அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 205,274 ஆனதுடன், அதனுள் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலுவையாக உள்ள 140 அலகுகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 170,429 ஆக நிலவியது. | நிலுவை வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி ஒப்பாய்வு செய்தல் மற்றும் வருமான பரிசோதகர்களிற்கு நிலுவை பட்டியல் வழங்குவதனூடாக இப்பணத்தை அறவிட எதிர்பார்க்கிறேன். |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 இல் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இல் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இல் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 29 வியாபார நிலையங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமை காரணமாக சபைக்கு ரூபா 127,600 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய எல்லா நிறுவனங்களுக்கும் முறையாக அனுமதிபத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அனுமதிபத்திர காலஎல்லையை கடந்துள்ள வேலைகளிற்காக மீண்டும் அனுமதிபத்திரத்தை புதுப்பித்துக்கொள்ளுமாறு அறிவித்துள்ளதுடன், எதிர்காலத்தில் அதிகார எல்லையினுள் உள்ள அனைத்து கைத்தொழில்கள் தொடர்பாக கண்டறிந்து சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற வேண்டிய கைதொழில்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டணம் செலுத்தாமல் சபை அதிகார எல்லைனுள் காட்சிப்படுத்தப்பட்ள்ள விளம்பர பலகைகளை இனங்காணுவதற்காக மீளாய்வாண்டினுள் ஆய்வொன்று மேற்கொனண்டிருக்காததுடன், மீளாய்வாண்டிற்காக ரூபா 49,870 தொகை அறவிட வேண்டியிருந்த 08 நிலையான விளம்பர பலகைகள் கட்டணம் அறவிடப்படாது கலற்றி அகற்றப்பட்டிருந்தன. | சபைக்கு கிடைக்க வேண்டிய அனைத்து வருமானங்களையும் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டு மேற் கொள்ளப்பட்ட ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு நிலையான விளம்பர பலகைகளிற்காக கட்டணம் அறவிடப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக புதிதாக பொருத்தப்பட்டுள்ள விளம்பர பலகைகள் தொடர்பாக விபரம் திரட்டப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான எஹெலியகொட ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடைகளிலிருந்து 2013 மற்றும் 2015 ஆண்டுகளிற்காக அறவிட வேண்டிய ரூபா 352,209 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வியாபாரத் தளங்களை வெளித்தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கும் போது உரிய முறையில் ஒப்பந்தங்களை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எஹெலியகொட நகர அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக வாராந்த சந்தை வளவினுள் கடையறைகளை நடத்துவது நிச்சயமின்மையால் குறித்த கடையறைகளுக்காக நாள் அடிப்படையில் பணம் அறவிடப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தத்திற்கு உட்படுத்தப்படவில்லை என குறித்த கோவை பரிசோதனையின் போது உறுதியானது. அதனால் நிலுவை பணத்தை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பது பிரச்சினைக்குரியது என்பதால் மதிப்பிற்குரிய ஆளுநரின் அங்கீகாரத்தின் கீழ் நிலுவை பணத்தை பதிவேடுகளிலிருந்து பதிவலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (இ) | எஹெலியகொட வாராந்த சந்தை தொடர்பான நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரையும் குத்தகைகாரரிடமிருந்து மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 180,000 ஆனது. | நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த பணத்தை அறவிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மீள் அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் முன் ஏற்பாடுகளை செய்கிறேன். |

**2.2.5 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 3,454,370 ஆனதுடன், அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய எல்லா வருமானங்களையும் தாமதமின்றி அறவிட்டுக்கொள்ள வேண்டும். | மதிப்பீடு தயாரிப்பதற்காக அதனுடன் தொடர்புடைய துணை ஏடுகள் கிடைக்காமை காரணமாக உறுதியான தொகையொன்றை பில்லிட முடியாதுள்ளது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய மீளாய்வாண்டில் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த 15 செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த சபைக்கு முடியாமலிருந்தது. | செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டம் அரசியல் அதிகாரம் இல்லாத காலத்தின் தயாரிக்கப்பட்டதால் அரசியல் அதிகாரத்தின் முன்னுரிமை மற்றும் சபையின் நிதி நிலைமை பிரகாரம் சிற் சில விடயங்களை செய்ற்படுத்த நேர்ந்தது என குறிப்பிடுகிறேன். |

(ஆ) **கழிவுப் பொருள் முகாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் ஒன்று சேர்க்கப்படும் உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுப் பொருட்கள் பேறுவான பிரதேசத்தில் ஒரு ஏக்கர் அளவான திறந்த இடத்தில் முறையற்ற விதத்தில் இடப்படுவதனால் பெறும் சுற்றாடல் மாசு ஏற்பட்டுள்ளது. | முறையான கழிவு பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டமொன்று திட்டமிட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | தினத்தோறும் பிரதேச சபையினால் 4 – 5 அளவான கழிவு பொருட்களை ஒன்று சேர்த்து பேறுவான இயற்கை பசளை கொட்டிலுக்கு வெளியிடுவதுடன் அதற்காக உள்ள நிலம் போதாமை காரணமாக அதற்கு அருகில் உள்ள 2 ஏக்கர் காணியை பெற்று தருமாறு |

| | | | |
|---|---|---|---|
| | | | கோரியிருந்த போதும் இது வரை அக் கோரிக்கை செயற்படவில்லை. தற்போது இயற்கை பசளை உற்பத்திற்காக கொண்டுவரும் கழிவு பொருட்கள் வெவ்வேறாக குவிக்கப்பட்டுள்ளன. ஏனைய கழிவு பொருட்கள் பெகோ இயந்திரம் மூலம் மண்வெட்டப்பட்டு மூடப்படுகின்றது. |
| (ii) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 126 (ix)(ஆ) பிரிவு பிரகாரம் மலசலம் அகற்றல், கழிவுப் பொருள் அகற்றல் மற்றும் அதற்காக கட்டணம் அறவிடலுக்கு துணைச் சட்டம் விதிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு சபைக்கு இயலாமலிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | துணைச் சட்டம் விதித்தல் தொடர்பாக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும், அந்நோக்கங்கள் தொடரபான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கான நீண்ட கால திட்டம் 2018 திசெம்பர் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக நீண்ட கால திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 (i) உப பிரிவு பிரகாரம் காணி விற்பனையின் பெற்ற தொகையிளிலிருந்து 1 சதவீதத்திற்கு சமனான வரியொன்று அறவி வேண்டிய போதும், 2015 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான | சபைக்கு பெறப்பட வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | அக் காணிகளின் உள்ளவாறான பெறுமதியை கண்டறிந்து விற்பனை விலையில் வேறுபாடொன்று ஏற்பட்டிருந்தால் குறித்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதினுள் 07 காணி ஏலவிற்பனையின் தறகாலிக பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் 1 சதவீதத்திற்கு சமனான கூட்டுத் தொகை ரூபா 762,920 ஆன தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | திவுரும்பிட்டிய நரியாமுல்ஹேன காணி ஏலவிற்பனையின் போது பொது நடவடிக்கைக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தின் 22.61 பர்சஸ் குறைவாக சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு பெறப்பட வேண்டிய காணி பங்குகளை பெற்றுக்கொள்ள தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | அக் காணி பங்கை பெற்று தருமாறு ஏலவிற்பனைகாரறை அறிவூட்டியதுடன் அவர் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்காததனால், பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக காணியின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து அறிவிக்குமாறு கடிதம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. அப் பெறுமதி கிடைத்த பின் ஏலவிற்பனைகாரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நீண்ட காலத்திலிருந்த நிலுவையாக உள்ள 07 உத்தியோகத்தர்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 56,654 ஆன கடன் மீதி 2019 ஏப்ரல் வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதி துரிதமாக அறவிட வேண்டும். | தற்போது அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 56,064 தொகையானது. |

**3.4 சொத்துக்கள் முகாமை**

**பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக மற்றும் நாளாதுவரையாக பராமரிக்காததனால் சபைக்கு சொந்மான அனைத்து நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதியை உறுதிப்படுத்த முடியாமலிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட வேண்டும். | சில நிலையான சொத்துக்கள் பல்வேறு நிறுவனங்களினால் நன்கொடையாக கிடைத்துள்ளது. மேலும் அச் சொத்துக்களுக்கு பெறுமதி மதிப்பீடொன்று இன்னும் செய்யப்பட்டிருக்காததுடன் அச் சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பெறுமதி குறிப்பிடப்பவில்லை. |

**3.5 பெறுகைகள்**

**3.5.1 வழங்கள் மற்றும் சேவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திவுரும்பிட்டிய நீர் உத்தேசதிட்டத்தின் கீழ் நீர் பெற்றுக்கொள்வதற்காக 2018 ஒக்தோபர் வரை 95 விண்ணப்பங்கள் மாத்திரம் கிடைத்திருந்த போதும், 2017 ஒக்தோபர் மாதம் ரூபா 656,250 தொகையை செலவிடப்பட்டு 350 நீர் மாணிகள் ஒருதடைவையின் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பெறுமதி ரூபா 568,125 ஆன 303 நீர் மாணிகள் ஓர் ஆண்டை விஞ்சிய காலம் விளைவற்றதாக இருந்ததுடன், அவற்றின் உத்தரவாத காலமும் முடிந்திருந்தது. | பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன் தேவையை சரியாக இனங்காண வேண்டும். | மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பத்தில் 350 அளவான வீடுகளிற்கு நீர் தேவையாக இருந்ததுடன், நீர் மாணிகள் கொள்வனவு செய்ததன் பின் இப் பிரதேசத்திற்கு நீர் விநியோக சபையினாலும் நீர் குழாய்கள் இடப்பட்டு நீர் விநியோகிக்கப்பட்டதன் காரணமாக எதிர்பார்த்த நீர் இணைப்புக்களின் அளவை வழங்குவதற்கு முடியாமலிருந்தது. எதிர்காலத்தில் திவுரும்பிட்டிய தோட்ட நீர் உத்தேச திட்டத்தை மேன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அங்கு இந் நீர் மாணிகளை பொருத்துவதற்கு முடியுமா இருக்கும். |
| (ஆ) | 2018 பெப்ரவரி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 676,750 பெறுமதியான 05 கணனிகள், வீத வரி மென்பொருள் தொகுதி மற்றும் பிரதிபன்னும் இயந்திரத்தின் தொழில் நுட்ப அளவுத்திட்ட மதிப்பீடொன்றை மேற் கொள்ளாமல் குறைந்தபட்ச விலையின் அடிப்படையில் பெறுகை கையளிக்கப்பட்டிருந்ததன் காரணமாக சரியான விலையில் பொருத்தமான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளவா என கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தொழில்நுட்ப அளவுத்திட்ட மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5.2 ஒப்பந்த நிருவாகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ)(i) | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினூடாக செயற்படுத்தப்படும் கிராமிய பிரதேசங்களில் 1000 கிலோமீட்டர் பாதைகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் - 2017 ன் கீழ் எஹெலியகொட பிரதேச சபை அதிகார எல்லையினுள் 02 பாதைகள் அபிவிருத்தி | கிடைத்திருந்த ஒதுக்கீட்டை பிராந்தியத்தின் அபிவிருத்திற்காக பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் மேற் குறித்த இரண்டு கருத்திட்டங்களுக்காக பெறுகை அறிவிப்பொன்று பிரசுரிக்கப்பட்டு 2017 செப்தெம்பர் 11 ஆம் திகதி வரை விலை மனு கோரப்பட்டது. பின்னர் பிரதான அமைச்சின் 2017 செப்தெம்பர் 29 திகதிய கடிதத்திற்கமைய இந்த 02 |

| | | | |
|---|---|---|---|
| | கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2017 ஆகஸ்ட் 02 ஆம் திகதி ரூபா 58,905,292 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. தகைமையுள்ள ஒப்பந்தக்காரரொருவரை தெறிந்து ஒப்பந்தத்தை ஒப்படைக்க சபையினால் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் உரிய திகதிக்கு கருத்திட்டங்களை முடிவு செய்ய முடியாமலிருந்ததுடன், 2018 நவம்பர் மாதம் ஒதுக்கீடு திருப்பி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | | கருத்திட்டங்கள் அபிவிருத்தி வடிவமைத்தல் மற்றும் இயந்திர உபகரணங்கள் அதிகார சபைக்கு ஒப்படைத்து மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. மிக சிறிய காலமொன்றினுள் இரண்டு கருத்திடங்களையும் செய்ய வேண்டியமை மற்றும் மாகாண சபை பொறியலாளர் இடமாற்றம் பெற்று சென்றமை இதற்கு பிரதானமாக தாக்கம் செலுத்தியிருந்தது. |
| (ii) | மேல் குறித்த 02 கருத்திட்டங்களையும் இரத்து செய்யும் தீர்மானம் எடுக்கையில் அப் பாதைகளின் 25 சதவீதத்திற்கும் குறைந்தளவிலான வெலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததனால் அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 13,054,363 ஆன தொகையினை பெற்றுக் கொள்வதில் அவதானமொன்று காணப்பட்டது. | மீதி வேலையை பூர்த்தி செய்வதற்காக தேவையான ஒதுக்கீட்டினை பெற்றுக் கொண்டு பயனுள்ளதாக இரண்டு வேலைகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டில் அதிக அளவில் மழைவீழ்ச்சி இருந்ததனால் பல தடவைகள் மேல் குறித்த 02 கருத்திட்டங்களின் ஒப்பந்த காலத்லை நீடிக்கும் தேவை ஏற்பட்டது. மேலும் அவ் 02 கருத்திட்டங்களையும் செயற்படுத்தும் பிரதேசம் மிகவும் கஷ்டப் பிரதேசமாகையால் குறித்த திகதிகளில் கருத்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாமலிருந்தது. |
| (iii) | விலைமனு கோரி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் இவ் வேலையை, சபரகமுவ மாகாண அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரணங்கள் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக அறிவித்தலிற்காக செலவிடப்பட்ட ரூபா 120,750 விளைவற்ற செலவானது. | முறையான திட்டமிடலுக்கமைய பணம் செலவிடப்பட வேண்டும். | தொடர்புடைய கருத்திட்டங்களிற்காக 2017 ஆகஸ்ட் 17 திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்ப இறுதித் திகதி 2017 செப்தம்பர் 07 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிடையில் இத் தருத்திட்டத்திற்குரிய ாத்திரிகை அறிவித்தல் மற்றும் டென்டர் விண்ணப்பம் தயாரித்துத்தந்த உள்ளூராட்சி பொறியியளாளர் அபபதவியிலிருந்து வேறொரு பதவியிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் டென்டர் குழு மற்றும் தொழிநுட்பக் குழு நியமிக்கும் செயற்பாடுட்டையும் உரிய முறைப்படி செய்து கொள்ள முடியாதுள்ளது. 2017 செப்தம்பர் 04 திகதி மு.ப 10.00 மணிக்கு எந்த ஒரு விண்ணப்பதாரரும் விண்ணப்பித்திருக்கவில்லை.<br>இந் நிலையை கருத்திற் கொண்டு மாகாண சபை பிரதான அமைச்சின் உதவியை பெற்றுக் கொள்வது பொருத்தம் என கருதியமையால் தொலைபேசியில் கதைத்து முன் ஏற்பாடுகளிற்காக மேல் கருத்திட்டங்கள் இரண்டையும் மாகாண சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | அபிவிருத்தி கருத்திட்டங்கள் 02 இற்காக மேற்கொள்ளப்பட்ட வேலையை விட ரூபா 60,005 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதல் செலுத்துகை அறவிடப்பட வேண்டும். | கூடுதலாக செலுத்தியுள்ள தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 18 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 1,296,000 ஆன மொத்த ஒதுக்கீடும் மீதியாக இருந்தன. | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதீடு தயாரிக்கப்படும் போது செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்த போதும் உரிய வேலைகள் மேறகொள்ளப்படாததனால் ஒதுக்கீடு மீதியாக உள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 10 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 828,050 ஆன மொத்த ஒதுக்கீட்டின் 81 சதவீதம் முதல் 97 சதவீதம் வரை வீச்சலவான மீதி காணப்பட்டது. | ஒதுக்கீடு பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதீடு தயாரிக்கப்படும் போது செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருந்த போதும் உரிய வேலைகள் மேறகொள்ளப்படாததனால் ஒதுக்கீடு மீதியாக உள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்த முயற்சி எடுத்திருக்கவில்லை. |